**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை**

# ஏற்றுமதி கையேடு

# பொருளடக்கம்


| வ.எண் | விபரங்கள் |
|---|---|
| I | ஏற்றுமதி ஒரு கண்ணோட்டம் |
| II | ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகள் |
| III | ஏற்றுமதியாளர் ஏற்றுமதி உத்தரவாதத்தை பெற்றவுடன் செய்ய வேண்டியவை |
| IV | ஏற்றுமதி மேற்கொள்ள தேவையான மிக முக்கிய ஆவணங்கள் |
| V | ஏற்றுமதி தொகுப்பு |
| VI | நிதியுதவித் திட்டங்கள் |

# உழவர் நலன் உயர உதவும்

# ஏற்றுமதி வழிகாட்டி

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிக்

பிறவும் தமப்போல செயின் "

பிறர் பொருளையும் தம் பொருளாக கருதி நல்தரத்துடன் வணிகம் செய்வதொன்றே நல் வணிகம் என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதி வணிகம் என்பது இன்றியமையாதொன்றாகும். ஏற்றுமதியினை உயர்த்தி இறக்குமதியினை குறைத்து சுய சார்புள்ள நாடாக நம் நாட்டினை மட்டுமில்லாமல் உழைக்கும் உழவர் தம் வாழ்க்கை தரத்தினையும் உயர்த்தும் ஒரு நற்கருவியே வேளாண் விளைபொருள் ஏற்றுமதி வணிகம். முதல்வருக்கு முதல்வனாக நமது தமிழ்நாட்டினை தரம் உயர்த்தும் வகையில் ஏற்றுமதி வழிகாட்டுமுறைகளை எளிய முறையில் எடுத்துரைத்து சாதாரண விவசாயிகளும் சாதனையாளர்களாக மாற உள்ளூர் சந்தையில் இருந்து உலக சந்தை வரை வணிகம் மேற்கொண்டு ஏற்றுமதியில் ஏற்றம் காண வழிகாட்டியாக நமது தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை முன்னெடுப்புகளின் ஒரு முயற்சியே இவ்வேற்றுமதி வழிகாட்டியின் முக்கிய நோக்கம் ஆகும்.

## I. ஏற்றுமதி ஒரு கண்ணோட்டம்

இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாடு 8.97 சதவிகிதத்துடன் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தைத் தொடர்ந்து மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலமாக உள்ளது. தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதி சந்தைகள் அமெரிக்கா, சீனா, ஜெர்மனி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் இங்கிலாந்து நாடுகள் ஆகும். கடல்சார் பொருட்களின் ஏற்றுமதியில் தமிழ்நாடு 38% பங்கைக் கொண்டு முன்னணி மாநிலமாக உள்ளது. தமிழ்நாட்டிலிருந்து காலை உணவுக்கேற்ற தானியங்களை கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்கள் 47% ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டிய பொருளை மேம்படுத்தி உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தை அதிகளவில் மேற்கொள்ள தமிழ்நாடு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மகாராஷ்டிரா மற்றும் குஜராத் எண்ணெய்யை பெரிதும் நம்பியுள்ள நிலையில், தமிழ்நாட்டின் ஏற்றுமதி மிகவும் பன்முகத்தன்மை வாய்ந்ததாக உள்ளது. முதலீடு மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசின் ஏற்றுமதி ஒருங்கிணைப்பு முகமை வழிகாட்டுதலின் படி 217 நாடுகளுக்கு 6226 பொருட்களை தமிழ்நாடு ஏற்றுமதி செய்கிறது. இந்தியாவிலிருந்து அரிசி மற்றும் சர்க்கரை அதிகளவில் ஏற்றுமதியும் தாவர எண்ணெய், பருத்தி மற்றும் முந்திரி போன்றவை அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

## II.ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகள்

நிறுவனம் துவங்குதல்
⇩
வங்கி கணக்கு துவக்கம்
⇩
PAN நிரந்தர வருமான கணக்கு எண் பெறுதல்
⇩
IEC Number (இறக்குமதி ஏற்றுமதி குறியீடு எண்)
⇩
விளைபொருள் தேர்வு
⇩
சந்தை தேர்வு
⇩
வாங்குவோர் தேர்வு
⇩
மாதிரிகள் அனுப்புதல்
⇩
விளைபொருள் விலை மற்றும் இதர செலவுகளை கணக்கீடு விலை நிர்ணயம்
⇩
வாங்குவோரிடம் பேச்சுவார்த்தை
⇩
ECGC மூலம் பண அபாயத்திலிருந்து பாதுகாப்பு

**1.நிறுவனத்தை பதிவு செய்தல்**

ஏற்றுமதி செய்ய விரும்புவோர் முதலில் நிறுவனத்திற்கான லோகா/சின்னம் மற்றும் பெயரை தேர்வு செய்து தனி நபர் அல்லது கூட்டு நிறுவனமாக கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்.

**2. வங்கி கணக்குஆரம்பித்தல்**

அந்நிய செலவாணியில் பரிவர்த்தனை மேற்கொள்ளக் கூடிய அங்கிக்கரிக்கப்பட்ட வங்கியில் நடப்பு கணக்கை தொடங்குதல் வேண்டும்.

உதாரணமாக EXIM வங்கி-இந்திய அரசால் அமைக்கப்பட்ட ஏற்றுமதி இறக்குமதி வங்கி, இவ்வங்கியின் மூலம் கிடைக்கும் பலன்கள்..

- ❖ தாமதமான கட்டண ஏற்றுமதி (Delayed Payment Export- இறக்குமதியாளரிடமிருந்து தொகை தாமதமாக பெறப்பட்டால் EXIM வங்கி தொகையை ஏற்றுமதியாளருக்கு வழங்குகிறது)
- ❖ முன் ஏற்றுமதி கடன் வழங்குகிறது (Free Shipment Credit)
- ❖ ஏற்றுமதி உற்பத்திக்கான காலகடன் (Term Loan for Export Product) வழங்குகிறது.
- ❖ வெளிநாட்டு முதலீட்டு நிதி (Foreign Investment Finance)
- ❖ ஏற்றுமதி சந்தைப்படுத்தலுக்கான நிதியளித்தல் (Financing Export and Marketing)

**3. நிரந்தர கணக்கு எண்ணை பெறுதல்**

(<http://www.onlineservices.nsdl.com/paam/end>userregistercontact/html)என்ற இணையத்தில் வருமான வரித்துறையிடமிருந்து இவ் எண்ணை பெற வேண்டும்

**4. இறக்குமதி ஏற்றுமதி குறியீடு எண்**

IEC பத்து இலக்க எண், வெளிநாட்டு வர்த்தகம் இயக்குநர் ஜெனரல் என்ற அலுவலகத்தில் 2NF 2A விண்ணப்பத்தில் ஆவணங்களுடன் சமர்ப்பித்து இக்குறியீடு எண்ணை பெற வேண்டும்

**5.பதிவு செய்தல் மற்றும் உறுப்பினர் சான்றிதழ் (RCMC)**

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு பல சலுகைகள் சேவைகள் மற்றும் வழிமுறைகள் பெற ஏற்றுமதியாளர்கள் இச்சான்றிதழை ஏற்றுமதி மேம்பாட்டு சபை, இந்திய ஏற்றுமதி நிறுவ கூட்டமைப்பு/விளைப்பொருள் வாரியம் / அங்கிக்காரம் பெற்ற ஆணையங்கள் மூலம் பெற வேண்டும்

**6. விளைபொருள் தேர்வு**

தடைசெய்யப்பட்ட பொருட்கள் தவிர எல்லாவிதமான பொருட்களையும் ஏற்றுமதி செய்யலாம். வெவ்வேறு விளைபொருட்களின் ஏற்றுமதி நிலவரத்தை நன்கு ஆராய்ந்து ஏற்றுமதி பொருளை தேர்வு செய்ய வேண்டும்

**7. சந்தையை தேர்வு செய்தல்**

வெளிநாட்டு வர்த்தக கொள்கையின் கீழ் உள்ள வெளி நாட்டின் சந்தை சார்ந்த ஏற்றுமதியின் பயன்களை ஏற்றுமதியாளர் ஆராய வேண்டும். தேர்வு செய்யும் நாட்டின் சந்தை அளவு, போட்டி தன்மை, தூரத்தேவை, கட்டண வரையறை இவற்றை ஆராய்ந்து வெளிநாட்டு சந்தையை தேர்வு செய்ய வேண்டும்.

**8. வாங்குவோரை கண்டுபிடித்தல்**

வாங்குவோரை கண்டுபிடிப்பதற்கு வர்த்தக கண்காட்சியில் பங்கேற்பது, வாங்குவோர் விற்போர் சந்திப்பு மேற்கொள்வது, கண்காட்சியில் கலந்து கொள்வது மற்றும் வணிக இணைய முகப்பில் ஆராய்வது போன்ற பல்வேறு வழிமுறைகள் உள்ளது. ஏற்றுமதியாளர் தங்களின் விளைபொருட்களுக்கான பட்டியல், விலை, கட்டண வரையறை மற்றும் விளைபொருட்கள் தொடர்பான கூடுதல் தகவலைக்கொண்ட பன்மொழி இணையதளத்தை உருவாக்கி வாங்குவோரை உங்களை நோக்கி அணுக செய்யலாம்.

**9. மாதிரிகள்**

ஏற்றுமதி ஆணையை பெறுவதில் வெளிநாட்டில் வாங்குவோரின் தேவையின் படி மாதிரிகள் அனுப்பப்படுகிறது. வெளிநாட்டு வர்த்தக கொள்கையின்படி எந்த வரைமுறையின்றி ஏற்றுமதி செய்யப்படும் விளைபொருளினுடைய தொழில்நுட்ப மாதிரியை வெளிநாட்டிற்கு அனுப்பலாம்.

**10. விலை/செலவீனம்**

தேசிய அளவில் விற்பனையை மேம்படுத்தவும், வாங்குவோரின் கவனத்தை கருத்தில் கொண்டும் ஏற்றுமதி பொருட்களின் விலையை நிர்ணயம் செய்வது முக்கியமானதாகும்.

ஏற்றுமதியாளர் விலையை நிர்ணயம் செய்ய கணக்கிடும் போது கீழ் உள்ளவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

1. FOB (Free on Board) என்பது ஏற்றுமதியாளர் பொருளை உற்பத்தி / கொள்முதல் செய்து பேக்கிங் மேற்கொண்டு விளைபொருட்களை துறைமுகம் வரை எடுத்து சென்று சுங்க அனுமதி பெற்று கப்பலினுள் சரக்கை ஏற்றும் வரையிலான செலவு
2. C&F(Cost and Freight) என்பது ஏற்றுமதி ஆகும் விளைப்பொருள் இறக்குமதியாகும் நாட்டின் துறைமுகம் வரை எடுத்து செல்ல ஆகும் செலவு.
3. CIF (Cost Insurance & Freight) என்பது இறக்குமதியாகும் நாட்டில் சரக்கு கட்டணம் மற்றும் காப்பீட்டு கட்டண செலவு

மேற்கண்ட மூன்று செலவுகளையும் கணக்கீட்டு ஏற்றுமதி விளைபொருட்களான விலை நிர்ணயம் செய்தல் சால சிறந்தது. ஏற்றுமதி செலவு தாளை பராமரிக்க வேண்டுமாய் அறிவுரை வழங்கப்படுகிறது.

**11. வாங்குவோரிடம் பேச்சு வார்த்தை மேற்கொள்ளுதல்**

ஏற்றுமதி பொருளை வாங்கும், ஆர்வம் எதிர்கால வாய்ப்புகள், தொடர் வணிகம் மற்றும் தேவையை மதிப்பிட்டு விளைப்பொருட்களான விலையில் சாதகமான சலுகை அல்லது விலை குறைப்பு செய்வது சிறந்தது.

**12. ECGC துணையோடு அபாயங்களை தவிர்ப்பது**

வாங்குவோர் அல்லது இறக்குமதி நாட்டின் நிதி நெருக்கடியினால் தேசிய வர்த்தகத்தில் அபாயங்கள் உள்ளது. இந்திய ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனம் (ECGC) நிறுவனத்தின் மூலம் காப்பீட்டு கொள்கையினால் இது போன்ற அபாயங்களிலிருந்து பாதுகாக்கப்படலாம். ஏற்றுமதியாளர் எந்தவித முன்பணமும் பெறாமல் அல்லது Letter of Credit (என்பதை இறக்குமதியாளரின் வங்கி ஏற்றுமதியாளருக்கு அவர் அனுப்பும் ஆவணங்களை சரிபார்த்மது பொருளிற்குரிய தொகையை வங்கி தன் சொந்த பொறுப்பில் வழங்குவதாக ஒப்புக்கொண்டு ஒரு கடிதத்தை ஏற்றுமதியாளர் வங்கிக்கு அனுப்பி வைத்தல்) யை மட்டும் பெற்றியிருந்தால் இந்திய ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனத்தின் மூலம் இறக்குமதியாளரின் கடன் வரம்பை பெற்றிருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

## III.ஏற்றுமதியாளர் ஏற்றுமதி உத்தரவாதத்தை பெற்றவுடன் செய்ய வேண்டியவை

1. தரச்சான்று சான்றிதழ் உரிய நிறுவனத்தில் பெறுதல்
2. துறைமுகத்தை தேர்வு செய்தல்
3. காப்பீட்டிற்கு விண்ணப்பித்து காப்பீடு தொகை செலுத்த வழி செய்தல்
4. ஏற்றுமதி சரக்கினை எடுத்து செல்ல Custom House Agent யை தொடர்பு கொள்ளுதல்

5. துறைமுக கிடங்கில் ஆய்வு மேற்கொண்டு கப்பல் இரசீது Shipping Bill பெறுதல்
6. கப்பலில் சரக்கை ஏற்றிய பின் துணை இரசீது Mate Receipt பெறுதல்
7. துறைமுகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தி கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டு Bill of Lading பெறுதல்
8. கப்பலில் சரக்கு ஏற்றப்பட்டது, கப்பலின் பெயர். சுங்க இரசீது, Packing வரிசையை இறக்குமதியாளருக்கு அனுப்புதல்
9. அனைத்து ஆவணங்களையும் வங்கியில் 21 நாளைக்குள் சமர்ப்பித்தல்
10. இறக்குமதியாளர் வங்கியில் ஆவணங்களை சமர்பித்து துறைமுகத்திலிருந்து சரக்குகளை இறக்குமதியாளர் எடுக்க அறிவுறுத்தப்படுகிறது.


### HSN குறியீடு பற்றி குறிப்பு

HSN குறியீடு ஓர் 6 இலக்கு எண், HSN குறியீடு (ஒத்திசைந்த அமைப்பு பல்வேறு பொருட்களுக்கு பொதுவான பெயரிடல்) உலக சுங்க அமைப்பினால் அமைக்கப்பட்டது. இந்திய வர்த்தகத்தில் எட்டு இலக்க ஐடிசி HS குறியீடு தேசிய வர்த்தகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அரசாங்க அதிகாரிகள் சரியான வரிகளைச் சேகரிப்பதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை அடையாளம் காண்பதற்காக HS குறியீடுயை பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் அதிகமான மற்றும் குறைவான வரி செலுத்துதல் தவிர்க்கப்படுகிறது. HS குறியீடு 21 பிரிவுகளை உள்ளடக்கியது.

HS குறியீடு தொடர்பான தகவல் பெற <http:/www.foreign.trade.com/reference/hscode.htm> வலைத்தளம் மூலம் பெறலாம்.

## IV. ஏற்றுமதி மேற்கொள்ள தேவையான மிக முக்கிய ஆவணங்கள்




- ❖ IEC Number (இறக்குமதி ஏற்றுமதி குறியீடு எண்)
- ❖ Central FSSAI Export License (மத்திய FSSAI ஏற்றுமதி உரிமம்)
- ❖ GST Registration Certificate (GST பதிவு செய்த சான்றிதழ்)

- RCMC Certificate from APEDA (பதிவு மற்றும் உறுப்பினர் சான்றிதழ்)
- Authourized Dealer Code from exporters Bank (ஏற்றுமதியாளர் வங்கியின் மூலம் பெற்ற AD குறியீடு)
- Phyto sanitary Certifcate (தாவர சுகாதார சான்றிதழ்)

**1.இறக்குமதி ஏற்றுமதி குறியீடு எண்**

IEC Number என்பது இறக்குமதி ஏற்றுமதி குறியீடு எண் வெளிநாட்டு வர்த்தகம் இயக்குநர் ஜெனரல் என்ற அலுவலகத்திலிருந்து ஏற்றுமதி வணிகத்தில் நுழைவோர் பெற வேண்டியதாகும், இவ்வெண்ணை பெற சென்னை, கோவை மற்றும் மதுரையிலுள்ள கிளைகள் மூலம் பெறலாம்.(www.dgft.gov.inhttp://www.dgft.gov.inவலை தளத்தை பார்க்கவும்)

**முக்கியத்துவம்..**

- ஏற்றுமதி மானியம் கிடைக்கும்
- APEDA-வில் உறுப்பினராக பதிய மற்றும் உணவு உரிமம் பெற இறக்குமதி ஏற்றுமதி குறியீடு தேவை
- வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் பணம் பெறுதல் மற்றும் அனுப்புவதற்கு வங்கிகளுக்கு இறக்குமதி ஏற்றுமதி குறியீடு தேவை.
- சுங்க வரி தீர்வு

**IEC Code பெற தேவையான ஆவணங்கள் பின்வருமாறு**

- விண்ணப்படிவம் (அசல் மற்றும் நகல்)
- கம்பனி பற்றிய விவரங்கள்
- PAN அட்டை/நிரந்தர வருமான வரி எண்(சுய சான்றொப்பம்)
- விற்பனை வரி சானறு (அசல்)
- IEC Code-க்கான அரசுக்கட்டணம்
- பாஸ்போட் அளவு புகைப்படம் (வங்கியாளர் கையொப்பமிட்ட ஸ்கேன்ட் நகல்)
- வங்கி சான்றிதழ் (ஸ்கேன்ட் நகல்)

**2.மத்திய FSSAI ஏற்றுமதி உரிமம்**

1. முதலாவதாக ஏற்றுமதி செய்ய விரும்புவோர் கம்பனிச்சட்டத்தின் கீழ் நிறுவனத்தை பதிவு செய்த சான்றை சமர்ப்பிக்க வேண்டும்
2. IEC Number என்பது இறக்குமதி ஏற்றுமதி குறியீடு எண் சமர்ப்பிக்க வேண்டும்
3. தடையில்லா சான்றிதழ் – ஏற்றுமதி செய்ய விரும்புவோர் FSSAI-யிடமிருந்து தடையில்லா சான்றை பெற வேண்டும். இச்சான்று இல்லாமல் ஏற்றுமதி மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார் என்பது குறிப்பிடத்தக்கது, மேற்கண்ட சான்று பெற தேவையான ஆவணங்கள் பின்வருமாறு
    - ✓ தோற்றம் (நாடு) சான்றிதழ் (Certificate of Origin)– இந்திய வர்த்தக ஊக்குவிப்பு சபை மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு கவுன்சில் மூலம் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. இதற்கான படிவம் தோற்றம் சான்றிதழ் (நாடு) துறையில் பெறலாம்.
    - ✓ IEC Number / இறக்குமதி ஏற்றுமதி குறியீடு
    - ✓ FSSAI உணவு வணிக உரிமம்
    - ✓ நுழைவு இரசீது (Bill of entry) – சரக்குகளின் விவரங்கள் எண்ணிக்கை, கட்டப்படும் தொகுப்புகளின் வகைகள், கப்பல் குறியீடு மற்றும் பெயர், சரக்குகளின் மதிப்பு மற்றும் சேரும் நாட்டின் மதிப்பு இதில் காணாலாம். இரசீது பெற கப்பலில் உள்ள சரக்கின் விலைப்பட்டியல்(Shipping invoice), கட்டப்படும் தொகுப்புகளின் (Packing list-packing material, packing pack numbers, HS code, Net weight, Total Weight and individual bag/pack weight) விபரங்கள், வங்கிக்கடன் சான்று கடிதம், கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டு(Bill of lading), காப்பீடு ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

- ✓ சுங்க முகவர் பிரகடனம்(Custom House Agent or importers declaration)

ஆவணங்களை சமர்ப்பித்த பின் அதனுடன் ஆய்வகக்கட்டணமும் கட்ட வேண்டும். FSSAI உரிய முத்திரையுடன் (Laballing) உள்ள மாதிரியை எடுத்து ஆய்வு மேற்கொண்டு FSSAI விதிமுறைக்குட்பட்டு மாதிரி இருப்பின் தடையில்லா சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**Labelling Requirements for the Exports of Food Products**

⇐

| | |
|---|---|
| 01 | Details about the Nutritional Facts and Information |
| 02 | Brand Name |
| 03 | Company Name |
| 04 | Product Name |
| 05 | Product Description |
| 06 | Name of the Ingredients used in a product |
| 07 | Net Volume of Contents |
| 08 | Net Weight |
| 09 | Labeling Requirement as oer the FSSAI (Packaging and Labeling) Regulation 2011 |
| 10 | Best Before and Use by Date |

⟹

| | |
|---|---|
| Net Quanity | 11 |
| Declaration of Veg and Non-Veg by Symbols | 12 |
| Name and Address of the Exporter in india | 13 |
| Batch Number | 14 |
| Code Number | 15 |
| List of Ingredients | 16 |
| Declaration regarding the Food Additives and Vegetarian of Non-Vegetarian | 17 |
| Date of Manufacture | 18 |
| Date of Packing | 19 |
| Country of Origin for the Important Food Product | 20 |

4. ஆணையாளரிடம் அங்கிகாரம் பெறுதல்
5. மத்திய உரிமம் ஆணையாளரிடமிருந்து FSSAIஏற்றுமதிக்கான உரிமம் வழங்கப்படும்.

### 3. GST பதிவு செய்த சான்றிதழ்

www.gst.gov.in வலைத்தளத்தில் சென்று மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண் மற்றும் PAN Number (நிரந்தர வருமான எண்) இதன் ஆவணங்களை பதிவேற்றம் செய்து GSTபதிவு சான்றிதழை ஆன்லைனில் பெற்று கொள்ளலாம்.

### 4. ஏற்றுமதியாளர் வங்கியின் மூலம் பெற வேண்டிய AD குறியீடு (Authourized Dealer Code from exporters Bank)

இந்திய ரிசர்வ் வங்கியால் தேசிய வங்கிகளுக்கு AD குறியீடு ஒவ்வொரு கிளைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. கப்பல் துறைமுகத்தை தெரிவித்து வங்கியில் விண்ணப்பித்து AD குறியீடு பெற்று கொள்ளலாம். இறக்குமதி/ஏற்றுமதிக்கு AD குறியீடு கட்டயாமாகும். வாழ்நாள் முழுவதும் AD குறியீடு செல்லுபடியாகும்.

**பெற வேண்டிய அவசியம்..**

1. AD குறியீடு என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்வதில் வெளிநாட்டு பணம் அனுப்புவதை/வந்து சேருவதை கண்டறிய பயன்படுகிறது.
2. சுங்க அலுவலகத்தில் ஷிப்பிங் பில்களை சமர்ப்பிக்கும் போது AD குறியீடு கட்டாயமாக குறிப்பிட வேண்டும்
3. AD குறியீடு இருப்பின் அரசாங்கத்தின் சலுகைகள், மானியங்கள் மற்றும் ஊக்கத்தொகைகள் ஏற்றுமதியாளர் வங்கி கணக்கிற்கே வந்தடையும்.

**வேண்டிய ஆவணங்கள்**

- வங்கி சான்றிதழ் (குறிப்பிட்ட படிவத்தில்)
- GST சான்றிதழ்
- PAN அட்டை
- IE குறியீடு சான்றிதழ்
- நிறுவனத்தின் ரத்து செய்யப்பட்ட காசோலை(Cancelled cheque)
- வகுப்பு 3 டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ் (உரிமம் பெற்ற சான்றளிக்கும் அதிகாரிடமிருந்து இச்சான்றிதழை பெற வேண்டும்).

**5.பதிவு மற்றும் உறுப்பினர் சான்றிதழ் (RCMC Certificate from APEDA)**

ஏற்றுமதி செய்ய விரும்புவோர் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தில் (APEDA)உறுப்பினராக பதிவு செய்து சான்றிதழை பெற வேண்டும்.

செயல்பாடுகள்

- நிதியுதவி அல்லது சாத்தியக்கூறு ஆய்வுகளை மேறகொள்வதன் மூலம் ஏற்றுமதிக்கான திட்டமிடப்பட்ட தயாரிப்புகள் தொடர்பான தொழில்களின் வளர்ச்சிகூட்டு முயற்சிகள் மற்றும் பிற நிவாரணங்கள் மற்றும் மானியத் திட்டங்கள் பற்றி தகவல் அறிய செய்வது.
- பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்தி, திட்டமிடப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியாளர்களாக நபர்களைப் பதிவு செய்தல்
- ஏற்றுமதியின் நோக்கத்திற்காக திட்டமிடப்பட்ட தயாரிப்புகளுக்கான தரநிலைகள் மற்றும் விவரக்குறிப்புகளை நிர்ணயித்தல்.
- திட்டமிடப்பட்ட பொருட்களின் பேக்கேஜிங்கை மேம்படுத்துதல்
- இந்தியாவிற்கு வெளியே திட்டமிடப்பட்ட பொருட்களின் சந்தைப்படுத்துதலை மேம்படுத்துதல்
- ஏற்றுமதி சார்ந்த உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் திட்டமிடப்பட்ட பொருட்களின் மேம்பாடு
- ஏற்றுமதி நிறுவனங்களின் உரிமையாளர்களிடமிருந்து புள்ளிவிவரங்களை சேகரித்தல் மற்றும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களை வெளியிடுதல்
- திட்டமிடப்பட்ட தயாரிப்புகளுடன் தொடர்புடைய தொழில்களின் பல்வேறு அம்சங்களில் பயிற்சி வழங்குவது.

**உறுப்பினராக பதிவு மேற்கொள்ள வேண்டிய குறிப்புகள்**

- ✓ www.apeda.gov.in<http://www.apeda.gov.in>வலைதளத்திற்கு செல்லவும்
- ✓ உறுப்பினராக பதிவு செய்ய (Register as Member) என்ற குறியை கிளிக் செய்யவும்
- ✓ மின்னஞ்சல் முகவரி, IE Code (இறக்குமதி ஏற்றுமதி குறியீடு எண்) மற்றும் கைபேசி எண்ணைப் பதிவு செய்யவும்
- ✓ OTP (ஒரு முறை கடவுச்சொல்) உங்கள் கைபேசியில் பெறுவதை வலைத்தளத்தில் பதிவு செய்யவும்
- ✓ ஆய்வை உறுதி செய்த பின், ஏற்றுமதியாளர் தங்கள் இணையளத்தில் விண்ணபத்தை தேவையான ஆவணங்களுடன் கவனத்தோடும் சரியாகவும் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆவணங்கள் JPEG/PDF/PNG வடிவில் மட்டுமே இருக்க வேண்டும்

- ✓ இணையதளம் மூலமாக பதிவு செய்வதற்கான கட்டணம் செலுத்தும் வரை விண்ணப்பதை SAVE செய்து தேவைப்படின் பதிவுச்செய்ய வேண்டியதை பதிவு செய்து கொள்ளலாம்.
- ✓ ஏற்றுமதியாளர் பதிவுக் கட்டணம் ரூ.5000/- வரியோடு ரூ.5900/- இணையதளத்திலும் கட்டணம் செலுத்தலாம் அல்லது DD/வரையோலை மூலமாகவும் (in favour of APEDA Payable at APEDA GST No.07AAAJA1150HIZU) செலுத்தலாம்.
- ✓ கட்டணம் செலுத்திய பின் விண்ணப்ப எண் அளிக்கப்படும் அதை குறித்து கொள்ளவும்
- ✓ உள்நுழைவு விவரம் ஏற்றுமதியாளரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். இதன்மூலம் விண்ணபத்தின் நிலையை கண்டறிந்து கொள்ளலாம்.
- ✓ ஏற்றுமதியாளர் விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தில் குறை ஏதேனும் இருப்பின் அதை சரி செய்து மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர் விண்ணப்பத்தின் நிலையை தொடர்ந்து கண்காணித்து கொள்ள வேண்ணடும்.
- ✓ சான்றிதழ் பெற தேவையான ஆவணங்கள்..
  - IEC Number - இறக்குமதி ஏற்றுமதி குறியீடு எண்(சுய கையொப்பத்துடன்)
  - வங்கிச் சான்றிதழ்
  - ஏற்றுமதியாளர் விரும்பினால் உற்பத்தியாளர் ஏற்றுமதியாளர் பதிவு செய்து அதற்குரிய கீழ்காணும் அதிகாரியிடம் பெற்று சமர்ப்பிக்கலாம்.

| | |
|---|---|
| விதைகள் | உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம்(FSSAI) தோட்டக்கலைத்துறை |
| காய்கறிகள் மற்றும் பழங்கள் | உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் (FSSAI) தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்மைத்துறை |
| நிலக்கடலை/பயிறு வகைகள்/கொத்தவரை | உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் (FSSAI), குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம் |
| பதப்படுத்தப்பட்ட பொருட்கள் | உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் (FSSAI) |
| பால்/கோழி/தேன் | உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் (FSSAI), / ஏற்றுமதியாளர் ஆய்வு சபை |
| மதுபானங்கள் | கலால் ஆணையர் |
| தானியங்கள் | உதயா ஆதார் / உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் (FSSAI) |

- ✓ இறுதியாக சான்றிதழை இணையளத்தில் view RCMC Certificate-யை கிளிக் செய்து நகல் எடுத்து கொள்ள வேண்டும்

### 6. Phyto sanitary Certificate (தாவர சுகாதார சான்றிதழ்)

மத்திய அரசின் தாவர தனிமைபடுத்தப்பட்ட தகவல் அமைப்பானது (Phyto sanitary Certificate) தாவர சுகாதார சான்றிதழை வழங்குகிறது. இச்சான்றிதழ் ஏற்றுமதி சரக்கானது பூச்சிகள் இல்லாமல் நாட்டின் தாவர சுகாதார தேவையை பூர்த்தி செய்வதைக் குறிக்கிறது.

- தாவர சுகாதார சான்றிதழ் செல்லுபடியாகும் காலம் அழியக்கூடிய பொருளாக இருப்பின் 7 நாட்களும் மற்ற பொருட்களுக்கு 30 நாட்களுக்கும் வழங்கப்படுகிறது.
- சான்றிதழ் வழங்கியவுடன் சரக்கு கப்பலில் ஏற்றப்பட வேண்டும்
- சரக்கு கப்பலில் ஏற்றும் 2 அல்லது 3 நாட்களுக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும். விதையை ஏற்றுமதி செய்தவதாக இருந்தால் 8 அல்லது 10 நாட்களுக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.
- **தேவையான ஆவணங்கள்**
  1. விதை இறக்குமதி செய்யப்படும் நாட்டின் அனுமதி விவரம்
  2. இரசீதுகளின் நகல்
  3. சுங்க இரசீது
  4. கடன் பெற்ற கடிதம்
  5. வர்த்தக ஒப்பந்தம்
  6. கொள்முதல் கடிதம்
  7. ஏற்றுமதி உரிமம்
  8. தெளிப்பான் சான்றிதழ்
  9. ஏற்றுமதி ஆய்வு கட்டணம் மற்றும் தெளிப்பான் கட்டணம்
  10. வரையறுக்கப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
- **இணையத்தில் விண்ணப்பிக்கும் வழிமுறைகள்**
  1. Plant Quarantine Information System முகப்பு பக்கத்திற்கு செல்லவும்
  2. கிளிக் செய்யவும்
  3. பெயர் மற்றும் முகவரி பதிவு செய்யவும்
  4. ஏற்றுமதியாளர் அல்லது இறக்குமதியாளர் என்பதை பதிவு செய்யவும்
  5. IEC எண்ணை பதிவு செய்யவும்
  6. தொடர்பு எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி பதிவு செய்து கணக்கை செயல்படுத்த வேண்டும்
  7. Plant Quarantine Information System முகப்பு பக்கத்திற்கு சென்று முகவரியில் login செய்து phytosanitary certicate பட்டனை அழுத்தி தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்
  8. விண்ணப்பித்த நபரின் சரக்குகளை ஆய்வு மேற்கொண்ட பின் (Phyto sanitary Certificate) தாவர சுகாதார சான்றிதழ் வழங்குகிறது.

# V.ஏற்றுமதி தொகுப்பு (Export Packaging)

ஏற்றுமதி தொகுப்பானது வெளிநாட்டில் வாங்குவோருக்கு ஏற்றுமதியாகும் பொருட்கள் எவ்வித சேதமும் இல்லாமல் அப்படியே கிடைக்க வழிவகை செய்கிறது. மூன்று விதமான அடுக்குகளாக ஏற்றுமதி தொகுப்பு உள்ளது.

### முதல்நிலை ஏற்றுமதி தொகுப்பு (Primary Packaging)

ஏற்றுமதி பொருட்களுடன் நேரடியாக தொடர்புள்ள தொகுப்பாகும் (பேக்கிங்). இத்தொகுப்பானது ஈரப்பதத்தை பராமரிப்பதோடு ஏற்றுமதி பொருட்களின் அனைத்து தகவல்களையும் அதாவது நாடு, ஊட்டச்சத்து விவரங்கள், நிகர எடை, குறியீடு எண் ப்ரேண்ட் (தர அடையாளம்), பொருட்களின் பெயர் போன்றவற்றை உள்ளடக்கியது. உதாரணமாக கேன் (பானங்கள்) அல்லது ப்ளாஸ்டிக் பை(pouch) பொருட்களை கொண்டு பேக் செய்யப்படுகிறது. முழு தானியங்கள், சத்துமாவு, மக்காசோள துணுக்குகள் போன்றவை ப்ளாஸ்டிக் பையில் போடப்பட்டு அதன்பின் சின்ன அட்டைபெட்டியில் பேக் செய்வது

### இரண்டாம் நிலை ஏற்றுமதி தொகுப்பு (Secondary Packaging)

அதிக எண்ணிக்கையிலான முதல்நிலை ஏற்றுமதி தொகுப்புகளை கொண்டது இரண்டாம்நிலை ஏற்றுமதி தொகுப்பாகும். இரண்டாம் நிலை ஏற்றுமதி தொகுப்புகள் ஒருங்கிணைந்த முதல்நிலை ஏற்றுமதி தொகுப்புகளை பராமரிப்பதோடு கூடுதல் பாதுகாப்பையும் அளிக்கிறது. இரண்டாம் நிலை ஏற்றுமதி தொகுப்புகள் பெட்டி, பாதுகாப்பிற்கான மெத்தை போன்ற அல்லது மெதுமெதுவான திணிப்பான்கள், பிரிவுகள், அதிக வலிமையூட்டும் பொருள், பைகள், காகிதம் போன்ற பல்வேறு கூறுகளை கொண்டுள்ளது. உதாரணமாக நெளிவு அட்டைபெட்டிகள், சுருக்கு மறைப்புகள், தட்டுகள்(Trays), காகித பலகை உறைகள்(Paperboard enclosures) போன்றவை இரண்டாம் நிலை ஏற்றுமதி தொகுப்புகளாக பயன்படுத்தப்படுகிறது.

### மூன்றாம் நிலை ஏற்றுமதி தொகுப்பு (Territary Packaging)

அதிக எடை/அளவு கொண்ட போக்குவரத்து தொகுப்பாக கருதப்படுகிறது. உற்பத்தி பகுதியிலிருந்து விற்பனை பகுதி வரை செல்லும் மூன்றாம் நிலை ஏற்றுமதி தொகுப்பு (Secondary Packaging). இரண்டாம் நிலை ஏற்றுமதி தொகுப்புகளை கொண்டது மூன்றாம் நிலை ஏற்றுமதி தொகுப்பாகும். குறிப்பாக மிகவும் பாதுகாப்பாக சேதத்தை தவிர்ப்பதற்காக ஏற்றுமதி செய்ய மூன்றாம் நிலை ஏற்றுமதி தொகுப்பு பயன்படுகிறது. மரப்பலகைகள், நெளிவு கொண்ட அட்டை பெட்டிகள், ப்ளாஸ்ட்டிக் பெட்டிகள், மரப்பெட்டிகள், நீட்டி உறை இடுதல் (Strectch wrap) போன்றவை மூன்றாம் நிலை ஏற்றுமதி தொகுப்பாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

# VI.நிதியுதவித் திட்டங்கள்

விவசாயிகளுக்கு இணையத்தளத்தை அமைத்து அதன் மூலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுகள் ஏற்றுமதியாளருடன் கலந்துரையாடவும் வாங்குவோர் விற்போர் சந்திப்பை ஏற்படுத்தியும் ஏற்றுமதிக்கான சந்தை வாய்ப்பை அறிய வழிவகுக்கின்றன. ஏற்றுமதி வாய்ப்புகளை அறிவதற்காக இந்திய வெளியுறவு அமைச்சகத்துடன் காணொலி காட்சியின் மூலம் தொடர்பு கொள்ள செய்கிறது. பல்வேறு திட்டங்களை மத்திய அரசு ஏற்றுமதிக்காக அறிமுகப்படுத்தியுள்ளது.

**1.குறிப்பிட்ட வேளாண் பொருட்களுக்கான போக்குவரத்து மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான நிதியுதவி**

விவசாயப்பொருட்களை கப்பல் மற்றும் விமானம் மூலம் ஏற்றுமதி செய்யும் போது ஆகும் இடர்பாடுகளை கலைவதற்காக குறிப்பிட்ட வேளாண் பொருட்களுக்கு போக்குவரத்து மற்றும் சந்தைபடுத்துதலுக்கான நிதியுதவி (TMA) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் அரசாங்கம் சரக்கு கட்டணத்தில் ஒரு பகுதியை திருப்பி செலுத்துவதோடு விவசாய விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்காக நிதியுதவி அளிக்கிறது. விவசாயப்பொருட்களுடன் பால் பொருட்கள் ஏற்றுமதிக்கும் இத்திட்டத்தில் நிதியுதவி வழங்குகிறது.

கடல் வழி ஏற்றுமதிக்கு 50% மற்றும் விமானம் மூலம் செய்யும் ஏற்றுமதிக்கு 100% உதவித்தொகைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

**2.வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களின் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் - ஏற்றுமதி கட்டமைப்புகளை மேம்படுத்துதல்**

அறுவடைக்குபின் விளைபொருள் எவ்வித சேதாரமில்லாமல் ஏற்றுமதி சந்தை தேவைகளை பூர்த்தி செய்வதை உறுதிசெய்யும் தர உத்தரவாத நடவடிக்கைகளான விளைபொருட்களை கையாளும் வசதிகளை அமைப்பதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

- Pack House (தரப்பிரிப்பு அறை): 40 சதவிகிதம் வரை அதிகபட்சம் ரூபாய் 200 இலட்சம்
- Pre cooling units with cold storages and refrigerated transportion (குளிர்பதனக்கிடங்குடன் கூடிய முன் குளிர்வித்தல் அமைப்பு மற்றும் குளிர்பதன போக்குவரத்து): 40 சதவிகிதம் வரை அதிகபட்சம் ரூபாய் 200 இலட்சம்
- Cable system (வாழை போன்ற பழங்களை கையாள கம்பிவடம்போன்ற அமைப்பு): மொத்தமதிப்பில் 40 சதவிகிதம் வரைஅதிகபட்சம் ரூபாய் 200 இலட்சம்
- Food Processing Facilities (மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்கானவசதிகள் X-Ray, Screening Euipments, Sortex, IQF (தனிப்பட்ட விரைவுகுளிர்பதன அமைப்பு), அழுக்கு கண்டறியும் கருவி, Sensor மற்றும் புது தொழில்நுட்பங்களுக்கு/உபகரணங்களுக்கு):
  மொத்த மதிப்பில் 40 சதவிகிதம் வரை அதிகபட்சம் ரூபாய்200 இலட்சம்
- Common Infrastructure Facilities(Phyto Sanitary) தேவையை பூர்த்திசெய்யும் ஏற்றுமதிக்கு முன் தேவைப்படும் வசதிகளானகதிர்வீச்சு முறை, சூடான நீராவி செலுத்தும் முறை, சூடானநீரில் மூழ்கி எடுக்கும் முறை போன்ற பொதுவான கட்டமைப்பு
  வசதிகள்) : ஒப்புதல் பெற்ற தொகையில் 90 சதவிகிதம் வரைஅதிகபட்சம் ரூபாய் 600 இலட்சம்

**தரத்தை மேம்படுத்துதல்**

- தர மேலாண்மை அமைப்பை நிறுவுதல் : மொத்த மதிப்பில் 50சதவிகிதம் அதிகபட்சமாக ரூபாய் 5 இலட்சம் ஒரு சான்றுக்கு

- ஆய்வகத்திற்கு பரிசோதனை உபகரணங்கள்: 1. ஆய்வகமேம்பாட்டிற்கு 50சதவிகிதம் அதிகபட்சமமாக ரூபாய் 100இலட்சம் 2. ஏற்றுமதியாளர் ஆய்வக உபகரணங்களுக்கு 50 சதவிகிதம் அதிகபட்சமமாக ரூபாய் 50 இலட்சம்
- பண்ணையளவில் ஆராய்தல் மற்றும் மாதிரிகள்பரிசோதித்தலுக்கான சாதனங்களை கையில் வைத்திருக்கும்சாதனங்கள் : உபகரணங்கள் மதிப்பில் 50 சதவிகிதம் அதிகபட்சமமாக ஒரு பயனாளிக்கு ரூபாய் 20 இலட்சம்
- நீர், மண், கால்நடை மருந்துகள், ஊக்கிகள், நெடிகள், அடர்உலோகங்கள் மற்றும் கலப்புகள் ஆராய்தல் : மொத்த மதிப்பில்50 சதவிகிதம் ஒரு மாதிரிக்கு ரூபாய் 5000/- வரை மட்டும்.அதிகபட்சமமாக ஒரு பயனாளிக்கு ரூபாய் 20 இலட்சம் ஐந்து வருடத்திற்கு(20 21-22 முதல் 2025-26).
- இறக்குமதியாகும் நாட்டின் சுகாதாரம் மற்றும் பைடோசுகாதாரம் பூர்த்தி செய்யும் சிறப்பு நடவடிக்கைகள்:ஏற்றுமதியாளர்/உழவர் உற்பத்தியாளர்/ சுய உதவிகுழுக்கள்,/ கூட்டுறவுகளுக்கு மொத்த மதிப்பில் 50 சதவிகிதம் அதிகபட்சமமாக ரூபாய் 25 இலட்சம்

**சந்தை மேம்படுத்துதல்**

- தேசிய வர்த்தக மேளாவில் கலந்து கொள்ள செய்வது
- வர்த்தக பிரதிநிதிகள் பரிமாற்றம்
- வாங்குவோர் விற்போர் சந்திப்பு ஏற்படுத்துதல்
- புதிய சந்தை அல்லது விளைபொருளை சாத்தியக்கூறுகள்ஆராய்ந்து கண்டறிதல்- மொத்த மதிப்பில் 50 சதவிகிதம்அதிகபட்சமமாக ரூபாய் 10 இலட்சம் ஓர் ஆய்வுக்கு
- மாதிரி ஏற்றுமதிக்கு - மொத்த மதிப்பில் 50 சதவிகிதம்அதிகபட்சமமாக ரூபாய் 10 இலட்சம்
- தர அடையாளம் அல்லது அறிவுசார் உடைமை வெளிநாட்டில்வாங்குதல் - மொத்த மதிப்பில் 50 சதவிகிதம் அதிகபட்சமமாகரூபாய் 20 இலட்சம் ஒரு பயனாளிக்கு

**3. இந்திய ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனம்**

இந்திய ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனமானது மத்தியஅரசினுடையதாகும். இத்திட்டம் இந்தியாவிருந்து ஏற்றுமதியை மேம்படுத்த கடன் அபாய காப்பீடு மற்றும் அதன் தொடர்பான சேவையை மேற்காள்கிறது.

- ❖ ஒரு நாட்டின் பொருளாதார அல்லது அரசியல் சீர்கேட்டினால்ஏற்றுமதிக்கான வருமானத்தொகை பெற அபாயம் இருக்கும்நேரத்தில் ECGC நிறுவனத்தின் கடன் அபாயகாப்பீடு மூலம்ஏற்றுமதியாளரை பாதுகாக்கிறது.
- ❖ ஏற்றுமதியாளருக்கு கடன் வசதியை மேம்படுத்த பல்வேறுவகையான காப்பீடுகளை வங்கிக்கும் மற்றும் இதரநிறுவனங்களுக்கும் வழங்குகிறது.
- ❖ MSME துறைக்கு ஏற்றுமதிகாரணிகளுக்கானவசதியைஅதாவதுமூலதன நிதியளிப்பு, கடன் இடர் பாதுகாப்பு, வெளிநாட்டிலுள்ளவாங்குவோரின் பெறப்பட்ட விளைபொருட்களின் விவரம்மற்றும் விற்பனை தகவல் பாதுகாப்பிற்காக அளிக்கிறது.
- ❖ இறக்குமதியாளர் / இறக்குமதியாளர் வங்கியிலிருந்து வரவேண்டிய நிலுவைத்தொகைக்கு இணையாக எந்த நேரத்திலும் காப்பீட்டுத்தொகை இருக்குமாறு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**குறைந்த கால காப்பீடு**

| வ.எண் | காப்பீடு | பாலிசி காலம் |
|---|---|---|
| 1 | நிலையான கொள்கை- ஆண்டு வணிக 12 மாதங்கள்வருமானம் தொகை 50 லட்சம் மேல் இருக்கும் ஏற்றுமதியாளர் | 12 மாதங்கள் |
| 2 | ஆண்டு வணிக சுழல் வருமானம் (turn over) கொள்கை-காப்பீட்டுத் தொகைவருடத்திற்கு 10 லட்சத்திற்கு மேல்இருப்பின் அதற்கேற்ற கூடுதல் தள்ளுபடி/ஊக்கத்தொகை | 12 மாதங்கள் |
| 3 | சிறு ஏற்றுமதியாளர் கொள்கை ஆண்டு வணிக சுழல் வருமானம் (turn over) 50. லட்சம் கீழ் இருக்கும் ஏற்றுமதியாளர் | 12 மாதங்கள் |
| 4 | சிறப்பு ஏற்றுமதி கொள்கை | 12 மாதங்கள் |
| 5 | வாங்வோரை சார்ந்த கொள்கை | 12 மாதங்கள் |
| 6 | ஏற்றுமதி அனுப்புகை பாலிசி | 12 மாதங்கள் |
| 7 | வாங்வோர் கடன் மற்றும் இதர கடன் சார்ந்த காப்பீடு | 12 மாதங்கள் |

http://www.ecgcltd.in/ecgcportal/வலைத்தளத்தில் பதிவு செய்யவும்

**4.Merchandise Exports from India Scheme (MEIS)**

**இந்தியாவிலிருந்து விளைபொருட்கள் ஏற்றுமதி திட்டம்**

உட்கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவுகளை ஈடுசெய்ய ஏற்றுமதியாளர்களுக்கு நிதி உதவி வழங்க உருவான திட்டமாகும்.வரிகடன் இரசீது மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் வாங்கப்பட்ட பொருட்கள் இலவசமாக மாற்ற இத்திட்டம் உதவுகிறது.

**5. வர்த்தக உட்கட்டமைப்பிற்கான ஏற்றுமதி திட்டம் (TIES) Trade Infrastructure for Export Scheme**

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தால் ஏற்றுமதிவர்த்தக உட்கட்டமைப்பிற்கான உதவியை மத்திய மாநில அரசுக்குவழங்குகிறது. திட்டமானது தர சோதனை மற்றும் சான்றிதழ் ஆய்வகங்கள்,குளிர் சங்கிலிகள், வர்த்தக ஊக்குவிப்பு மையங்கள், ஏற்றுமதிகிடங்குகள் மற்றும் பேக்கேஜிங் (Packaging), குளிர்பதன கிடங்குகள், எல்லை வர்த்தகம் (இந்தியா-பங்களாதேஷ்) மற்றும் சரக்கு மையங்களுக்கு உதவி வழங்குகிறது.

**6. சந்தை நுழைதல் முயற்சி (Market Access Initiative)**

இத்திட்டம் சந்தை ஆய்வுகள். சர்வதேச வர்த்தக கண்காட்சிகள், கண்காட்சியில் பங்கேற்பது, விளம்பரம் மற்றும் விளம்பர முகாம்கள் மற்றும் பேக்கிங் தொடங்குதல், குறிப்பிட்ட விளைபொருட்களை மேம்படுத்துதல் மற்றும் வாங்குவோர் விற்போர்சந்திப்புக்கூட்டம் போன்றவற்றிக்கு இத்திட்டம் மூலம் பயன் பெறலாம்.

**7. ஏற்றுமதி மேம்பாட்டு மூலதனப்பொருட்கள் திட்டம்(Export Promotion Capital Scheme)**

ஏற்றுமதியாளர்களுக்கு உற்பத்திக்கு முன் மற்றும் உற்பத்திக்குபின் தேவையான மூலதனப்பொருட்களை பூஜ்ஜிய சுங்க வரியில்இறக்குமதி செய்ய வழிவகுக்கிறது.

பூஜ்ஜிய சுங்க வரியில் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யும்மூலதனப்பொருட்களான தளவாடங்கள், உபகரணங்கள், உபரிபொருட்கள், சேவைகள், புதுப்பித்தல், மாற்றுவித்தல், தொழில்நுட்பம்மேம்படுத்துதல் அல்லது அதிகப்படுத்துதல், கட்டுமான தளவாடங்கள்மற்றும் உபகரணங்கள், குளிர்பதன தளவாடங்கள், ஆய்வுகள், ஆராய்ச்சிமற்றும் மேம்படுத்துதல், தர மற்றும் மாசு கட்டுபாடிற்கான தளவாடங்கள்மற்றும் உபகரணங்கள், வேளாண்மை, மீன் வளர்ப்பு, கால்நடை,மலர் வளர்ப்பு, தோட்டகலை, கோழி வளர்ப்பு, திராட்சை வளர்ப்புபோன்றவைகளின் மூலதனப்பொருட்கள் மற்றும் சேவைகளுக்குபயன்பெறுகிறது.

**ஏற்றுமதியில் நறுமணப் பொருட்கள் வாரியத்தின் பங்கு**

இந்திய நறுமணப் பொருட்கள் வாரியம் 1987 இல் நிறுவப்பட்டது, அதன் வரம்புக்கு உட்பட்ட 52 நறுமணப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியவை இந்நிறுவனத்தின் நோக்கமாகும். ஏலக்காய் உற்பத்தி, பதப்படுத்துதல், உள்நாட்டு சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி (சிறியது மற்றும் பெரியது) ஆகியவற்றிலும் ஈடுபட்டுள்ளது.

உலகளாவிய நறுமணப் பொருட்களின் சந்தையில்இந்தியாவை முதன்மை விநியோகராகவும், சுத்தமான, பாதுகாப்பான மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட நறுமணப்பொருட்களின் சர்வதேச செயலாக்க மையமாகவும் மாற்றுவதை நோக்கமாக கொண்ட இந்நிறுவனம் ஏற்றுமதியினை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நடுவண் அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் நறுமணப் பொருட்கள் வாரியம் (ஸ்பைஸ் போர்டு) நறுமணப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் ஏலக்காயின் உற்பத்தித் திறனை அதிகரிக்க 15வது நிதிக் கமிஷனின் கீழ் 2025-26ஆம் நிதியாண்டிற்காக ரூ.422.30 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

நறுமணப் பொருட்களில் மதிப்பூட்டம் செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்தி, பாதுகாப்பான பொருட்களை உற்பத்தி செய்தல், புவிசார் குறியீடுள்ள நறுமணப் பொருட்களின் அபிவிருத்தி, புதிய தொழில்முனைவோர்களுக்கு ஆதரவளித்தல், போன்றவை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் வேளாண் குழுக்கள், வேளாண் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வடகிழக்கு மாநிலத்திலுள்ள ஏற்றுமதியாளர்கள், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவு தருதல் போன்றவை இத் திட்டத்தில் அடங்கும்.

சிறிய மற்றும் பெரிய ஏலக்காயின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக மறு நடவுத் திட்டம், தரமான நடுபொருட்களை வழங்குவது, நீர்நிலைகள் அமைப்பது, காலநிலையின் அடிப்படையிலான காப்பீட்டுத்திட்டம், மற்றும் நிலையான உற்பத்திக்கான விரிவாக்க செயல்பாடுகள் இந்த புதிய திட்டத்தின் மூலமாக நடத்தப்படவுள்ளன.

நறுமணப் பொருட்களின் வர்த்தக மேம்பாட்டிற்காக சந்தை விரிவாக்கம், வர்த்தக அபிவிருத்தி, வர்த்தக ரீதியிலான தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல், தரப்பரிசோதனைக்கான ஆய்வகங்களை அமைத்தல் போன்ற வர்த்தக விரிவாக்க செயல்பாடுகளையும் இந்த திட்டம் நிறைவேற்றவுள்ளது.

இந்த திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கலாம். மேலும் கூடுதல் விபரங்கள் மற்றும் விண்ணப்பித்துக் கொள்ள ஸ்பைசஸ் போர்டின்

வலைதளமான www.indianspices.com அல்லது அருகிலுள்ள ஸ்பைசஸ் போர்டின் அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

www.indiaspices.com என்ற வலைதளத்திலும் தங்களுக்கான நறுமணப் பொருட்களுக்கான தகவல்களை பெறலாம்.